# யூலை – 23 – செவ்வாய்

## புனித பிரசித்தா – துறவி

**விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் ஆவார் மத்.12:50**

-------------------------------------------------------------------

## முதல் வாசகம்: விடுதலைப் பயணம் 14:21--15: 1

அந்நாட்களில் மோசே தம்கையைக் கடல்மேல் நீட்டவே, ஆண்டவர் கீழைக்காற்றை இரவுமுழுவதும் வன்மையாக வீசச்செய்து கடலைப் பின்வாங்கவைத்து உலர்ந்த தரையாக்கினார். நீர்த்திரள் பிரிக்கப்பட்டது. வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் உள்ள நீர்த்திரள் அவர்களுக்குச் சுவராகவிளங்க இஸ்ரயேல் மக்கள் கடல்நடுவே உலர்ந்ததரையில் நடந்துசென்றனர். எகிப்தியர் அவர்களைத் துரத்திச்சென்றனர். பார்வோனின் குதிரைகள், தேர்கள், குதிரைவீரர்கள் அனைவரும் அவர்களுக்குப் பின்னால் நடுக்கடல்வரை சென்றனர். பொழுதுபுலரும் முன், நெருப்பும் மேகமுமான தூணிலிருந்து ஆண்டவர் எகிப்தியரின் அணிவகுப்பு களைப் பார்த்து அந்த எகிப்திய அணிவகுப்புகளை நிலைகுலையச் செய்தார். அவர்களுடைய தேர்களின் சக்கரங்களை அவர் புதைந்து போகச்செய்ததால், தேரோட்டுவது அவர்களுக்குக் கடினமாயிற்று. அப்போது எகிப்தியர், ”இஸ்ரயேலரிடமிருந்து நாம் ஓடிச்சென்று விடுவோம். ஏனெனில், ஆண்டவர்தாமே அவர்கள் சார்பாகநின்று எகிப்தியராகிய நமக்கு எதிராகப்போரிடுகிறார்” என்றனர். ஆண்டவர் மோசேயை நோக்கி, ”நீர்த்திரள் எகிப்தியர் மேலும் அவர்கள் தேர்கள் குதிரைவீரர் அனைவர் மேலும் திரும்பிவரச் செய்வதற்காக உன்கையைக் கடல்மேல் நீட்டு” என்றார். மோசே தம் கையைக் கடல்மேல் நீட்டவே, காலையில் விடியும்நேரத்தில் கடல் தன் முன்னைய நிலைக்குத் திரும்பிவந்தது. அதற்கு எதிர்ப்பட அஞ்சி, எகிப்தியர்கள் விரைந்தோடுகையில் ஆண்டவர் எகிப்தியரை நடுக்கடலில் அமிழ்த்தினார். திரும்பிவந்த நீர்த்திரள் தேர்கள், குதிரைவீரர்கள் மற்றும் கடலுக்குள் துரத்திச்சென்ற பார்வோனின் படைகள் அனைவரையும் மூடிக்கொண்டது. அவர்களில் ஒருவன் கூடத்தப்பவில்லை. ஆனால் இஸ்ரயேல் மக்கள் கடலின் உலர்ந்த தரையில் நடந்துசென்றனர். நீர்த்திரள் வலப்புறமும் இடப்புறமும் அவர்களுக்குச் சுவராக நின்றது. இவ்வாறு ஆண்டவர் அந்நாளில் எகிப்தியர் பிடியினின்று இஸ்ரயேலருக்கு விடுதலையளித்தார். கடற்கரையில் எகிப்தியர் செத்துக்கிடப்பதை இஸ்ரயேலர் கண்டனர். எகிப்தியருக்கு எதிராக ஆண்டவர் கைவன்மை காட்டிச்செயல் புரிந்ததை உணர்ந்து ஆண்டவர்மீது மக்கள் அச்சம்கொண்டனர். மேலும் அவர்கள் ஆண்டவரிடமும் அவர் அடியார் மோசேயிடமும் நம்பிக்கை வைத்தனர். அப்போது மோசேயும் இஸ்ரயேல் மக்களும் ஆண்டவரைப் புகழ்தேத்திப் பாடிய பாடல் வருமாறு ஆண்டவருக்கு நான் புகழ் பாடுவேன் ஏனெனில், அவர் மாட்சியுடன் வெற்றிபெற்றார் குதிரையையும், குதிரை வீரனையும் கடலுக்குள் அமிழ்த்திவிட்டார்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்குப் புகழ் பாடுவேன், ஏனெனில்,
மாட்சியுடன் வெற்றி பெற்றார்.

## நற்செய்தி : மத்தேயு 12 : 46 - 50

அக்காலத்தில் மக்கள் கூட்டத்தோடு இயேசு பேசிக்கொண்டிருந்த போது அவருடைய தாயும் சகோதரர்களும் வந்து அவருடன் பேச வேண்டும் என்று வெளியேநின்று கொண்டிருந்தார்கள். ஒருவர் இயேசுவை நோக்கி, ”அதோ, உம்தாயும் சகோதரர்களும் உம்மோடு பேசவேண்டும் என்று வெளியேநின்று கொண்டிருக்கின்றார்கள்” என்றார். அவர், இதைத்தம்மிடம் கூறியவரைப்பார்த்து, ”என்தாய் யார்? என்சகோதரர்கள் யார்?” என்றுகேட்டார். பின் தம்சீடர்பக்கம் கையைநீட்டி, ”என்தாயும் சகோதரர்களும் இவர்களே. விண்ணகத் திலுள்ள என்தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என்சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார்” என்றார்.

**தியானம்:** இயேசு மனிதரை மீட்க மனிதருள் ஒருவராக உதித்தார். அன்னை மரியாளின் உதிரத்தின் வழியாக இந்த உலகத்தில் பிறந்து, யூத சட்டத்தின் அடிப்படையிலே கல்வி பயின்று அந்தக் கலாச்சாரத்தில் வளர்ந்தார். இவ்வாறு மனிதரில் ஒன்றாகக் கலந்துவிட்ட இயேசு தன்னை எப்போதும் இந்த உறவுகளோடு, மதத்தோடு, கலாச்சாரத்தோடு ஐக்கியப்படுத்திக் கொண்டதில்லை. மாறாக ஆவிக்குரிய வாழ்வின் தோழமையை அதாவது கடவுளே நம்முடைய உண்மையான தந்தை நாமெல்லாம் அவருடைய அன்புப்பிள்ளைகள் எனவே நாம் அனைவரும் சகோதர சகோதரிகள் என்ற உறவை இன்றைய நற்செய்தியின் வழியாக வெளிப்படுத்துகின்றார். “இம்மண்ணுலகில் உள்ள எவரையும் தந்தை என நீங்கள் அழைக்க வேண்டாம். ஏனெனில் உங்கள் தந்தை ஒருவரே. அவர் விண்ணகத்தில் இருக்கிறார்” (மத்.23:9). மனிதர்களை பிரித்தாழுகின்ற சக்திகள் இன்று ஏராளம். மனிதர்கள் ஜாதி, இனம், மொழி, கலாச்சாரம், பண்பாடு, நிறம் என்ற பல்வேறு கூறுகளால் பிளவுபட்டு நிற்கின்றோம். எனவேதான் நமக்குள் வேறுபாடு, ஏற்றத்தாழ்வு, பிரிவினைகள், சண்டை சச்சரவுகள். நாமெல்லாம் விண்ணகத்தந்தையின் அன்புப் பிள்ளைகள் என்றால், நாமெக்கெல்லாம் ஒரே தந்தைதான் என்பதை உணர்ந்தால், நாமெல்லாம் சகோதர சகோதரிகள் என்ற உணர்வை வளர்த்துக் கொண்டால் இந்த உலகமே அன்பினால் இயக்கப்படுகின்ற உறவுச் சமூகமாக இருக்கும். “நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார், அந்த ஆவி அப்பா தந்தையே எனக் கூப்பிடுகின்றது” (கலா.4:6). கடவுளை அப்பா தந்தையே என்று உரிமையோடு அழைக்க வேண்டுமென்றால், அந்த உறவை நாம் அனுபவிக்க வேண்டுமென்றால் நாமெல்லாம் தூய ஆவியால் நிரப்பப்பட வேண்டும். ஏனெனில் “மனித இயல்பை மட்டும் உடைய ஒருவர் கடவுளின் ஆவிக்குரியவற்றை ஏற்றுக்கொள்வதில்லை. அவற்றைத் தூய ஆவியின் துணைகொண்டே ஆய்ந்துணர முடியும்” (1.கொரி.2:14) ஆகவே தூய ஆவியின் துணைகொண்டு நமது ஆன்மீக உறவுகளை வளர்த்தெடுப்போம் இயேசுவுக்கு சகோதர சகோதரிகளாக மாறுவோம்.